1984 மார்ச் 8]

கூட்டுறவு வங்கிகளின் நகை அடமானம் வைக்கும் விவசாயிகள்.

(225—*வினா 17542)—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் நகை அடமானம் வைக்கும் விவசாயிகள் ரேகை வைப்பவராக இருந்தால் ஜாமீன் கேட்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கே இடம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பெரும்பாலும் கிராமங்களில் இருக்கக் கூடிய விவசாயிகள் அவர்களுக்குத் தேவையேற்படுகிறபோது, வட்டிக்குக் கடன் கிடைக்காத காரணத்தால், அவர்கள் நகைகளை ஈடு வைத்துத்தான் கடன் பெறவேண்டியிருக்கிறது. அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாத காரணத்தால்—40-45 வயதை எய்திவிட்டவர்களுக்குக்கூட எழுதப் படிக்கத் தெரியாத நிலை இருப்பதால்—இப்படி ஈடுவைத்து கடன் பெற வருகின்றபோது, அவர்களைத் தெரிந்தவர்கள் யாராவது இருவர் வந்து கையெழுத்துப் போடவேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நகரத்தில் யாரும் தெரியாது. மேலும் இப்படி கையெழுத்துப்போடுவதற்கு தெரிந்தவர்களும் மறுக்கிறார்கள். ஆகவே இதை மறுபரிசீலனை செய்து விவசாயிகளுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னார் என்பதை அடையாளம் காட்டுவதற்கு கையெழுத்துப் போடுவது என்பது வேறு, ஜாமீன் நின்று கையெழுத்துப் போடுவது என்பது வேறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட மூலக்கேள்வி கைரேகையிடுகின்ற விவாசயிகளிடம் ஜாமீன் கேட்பது உண்மையா என்பதாகும். அதற்கு ஜாமீன் கேட்பது இல்லை. இன்னாருடைய கைரேகை அது என்பதை அடையாளம் காட்டுவதற்குத்தான் இரண்டு பேர்களிடத்தில் சாட்சிக் கையெழுத்துக் கேட்கப்படுகிறது. தற்போது 1229 விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், 128 நகர கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் இதுபோன்ற கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கிகளில் நகைகளின் பேரில் கடன்பெறுகிறபோது 14 சதவீதம் வட்டி வாங்கப்படுகிறது. நகைகளை அடமானம் வைத்து இந்தக் கடன் பெறப்படுவதால், அதைக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அதைப் பற்றி எந்தப் பரிசீலனையும் இல்லை.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜாமீன் கேட்பது இல்லை என்று சொன்னார்கள். அடையாளம் காட்டுவதற்காகத்தான் இரண்டு பேரிடத்தில் சாட்சிக் கையெழுத்து வாங்கப்படுவதாகவும் சொன்னார்கள். கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்கு , கையெழுத்துப் போடுகிறபோது அது அடையாளம் காட்டுவதற்காக கையெழுத்தா அல்லது ஜாமீனுக்காக கையெழுத்தா என்று தெரிந்து கொள்ள முடியாமல், கையெழுத்துப் போட அஞ்சுகிறார்கள். அவர்கள் கட்டாமல் போய்விட்டால் நம்மிடத்தில் வசூலித்து விடுவார்களோ என்றும் அஞ்சுகிறார்கள். ஆகவே, நகை கடன்கள் பெறுகின்ற நேரத்தில் மட்டும் அந்தக் கையெழுத்து வாங்காமல் அவர்கள் கடன்பெற வழிவகை செய்யப்படுமா? நகைக்கடனுக்கு மட்டும் அப்படி உத்தரவு போட முடியுமா? நகர்ப் புறத்தில் இருப்பவர்கள் எப்படியோ கடன் வாங்கிவிடுகிறார்கள். ஆகவே, கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் நிவாரணச் சட்டம் நிறைவேற்றப் பட்டதால் விவசாயிகள் வெளியே கடன் வாங்க முடியவில்லை என்பதை உணர்ந்துதான் தற்போது 1229 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், 403 மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் மூலமாகவும் 128 நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் அவற்றின் 12 கிளைகள் மூலமாகவும் விவசாயிகளுக்கு முன் உரிமை கொடுத்து கடன் வழங்கப்படுகிறது. 1983—84 வரை 60 கோடி ரூபாய் அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே பெரும்பகுதி விவசாயப் பெருமக்களுக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம் நிச்சயமாக விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்காகத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS